Register Number

# தமிழ் — இரண்டாம் தாள்

காலம் : $2\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

குறிப்பு : i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.

ii) முகவுரை, பொருளுரை, முடிவுரை என்ற அமைப்பில் கட்டுரை அமைதல் வேண்டும்.

I. பின்வரும் தலைப்புக்களில் ஏதேனும் **ஒன்று** பற்றி இரு பக்கங்களில் கட்டுரை வரைக. $1 \times 10 = 10$

1. பசுவின் செயலும், கதை உணர்த்தும் நீதியும்.
2. நாகராஜனும், புத்தகங்கள் மீது அவருக்குள்ள ஆர்வமும்.
3. மண்ணாசை - பெயர்ப் பொருத்தத்தை ஆய்க.

II. கீழ்க்காணும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்று** பற்றிக் கடிதம் வரைக. $1 \times 10 = 10$

(குறிப்பு : கடிதத்தில் கையொப்பமிடும் இடத்தில் 'X' என்று குறிப்பிடவும். பெயரோ, பதிவு எண்ணோ, முகவரியோ எழுதினால் விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட மாட்டாது.)

4. உங்கள் ஊருக்குப் பேருந்து வசதி செய்துதர வேண்டிப் போக்குவரத்துக்கழக மேலாண்மை இயக்குநருக்கு ஒரு கடிதம் எழுதுக.
5. அண்மையில் நீவிர் கண்டுகளித்த பொருட்காட்சியின் சிறப்பினை விவரித்து நண்பருக்கு ஒரு மடல் வரைக.
6. காணாமல் போன நகைகளை மீட்டுத் தருமாறு காவல்துறை அதிகாரிக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

III. கீழ்க்காணும் பாடலைப் படித்துப் பின்வரும் **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக. $5 \times 2 = 10$

7. சொல்லுவது எல்லார்க்கும் சுலப மாகும்;
சொன்னபடி நடப்பவர்கள் மிகவும் சொற்பம் !
எல்லையின்றி நீதிகளை எழுது வார்கள்;
எழுதியது பிறருக்கே தமக்கென் றெண்ணார் !
தொல்லுலகில் நாமறிந்த தலைவர் தம்முன்,
சொன்னதுபோல் செயல்முயன்றார் இவரைப் போல
இல்லையென்னும் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி
இந்தியத்தாய் உலகினுக்கே ஈந்த செல்வம் !

*வினாக்கள் :*

i) எது எல்லார்க்கும் சுலபமாகும் ?

ii) எது மிகவும் சொற்பம் ?

iii) எதைத் தமக்கென்று எண்ணார் ?

iv) சொன்னது போலச் செயல் முயன்றார் யார் ?

v) இப்பாடலுக்கு ஏற்ற தலைப்பொன்று தருக.

IV. 8. கீழ்க்காணும் உரைநடையை மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி எழுதுக : $1 \times 10 = 10$

நாம் தமிழ்மக்கள். நாம் நமது தாய்மொழி வாயிலாகக் கல்வி பெறலே சிறப்பு. அதுவே இயற்கை முறை. போதிய ஒய்வும், நேரமும், வாய்ப்பும் இருப்பின் வேறு பல மொழிகளையும் பயிலலாம். ''தமிழில் அக்கலை இல்லையே; இக்கலை இல்லையே; சிறப்பாக 'விஞ்ஞானம்' என்னும் அறிவுக்கலை இல்லையே,'' என்று சிலர் கூக்குரலிடுகிறார்கள். ஆங்கிலத்தில் முதல் நூல்களாகவா எல்லாக்கலைகளும் பிறந்தன என்பதை அந்த அன்பர்கள் உணர்வார்களாக. வேறு மொழிகளிலிருந்தும் ஆங்கில அறிஞர் தம்மொழியில் பலகலைகளைப் பெயர்த்தெழுதியுள்ளனர். இதுகாறும் உலகில் காணப்பட்டுள்ள புதுமைகள் எல்லாவற்றையும் ஆங்கிலேயர் மட்டுமா கண்டனர் ? இல்லை, இல்லை. சில பிரெஞ்சுக்காரர்களால் காணப்பட்டன, மற்றுஞ்சில வெவ்வேறு நாட்டினரால் காணப்பட்டன. ஆங்கிலேயரும் சில கண்டுள்ளனர். உலகில் பல இடங்களில் பல நுட்பங்கள் காணப்பட்டது இயல்பு. அவற்றைக் காணும் அறிஞரை 'அவ்வந் நாட்டார், அவ்வம் மொழியினர்' என்று கருதுதல் கூடாது.

V. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக :

9. அன்பின் ஐந்திணைகள் யாவை ? $1 \times 2 = 2$

அல்லது

சிறுபொழுது எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

10. கரந்தைத் திணையை விளக்குக. $1 \times 2 = 2$

அல்லது

பாடாண்திணையை விளக்குக.

11. பா எத்தனை வகைப்படும் ? அவை யாவை ? $1 \times 2 = 2$

அல்லது

இணைக்குறளாசிரியப்பாவின் இலக்கணத்தை எழுதுக.

12. கீழ்க்காணும் குறளை அலகிட்டு வாய்பாடு கூறுக : $1 \times 2 = 2$

வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா

யாக்கை பொறுத்த நிலம்.

13. கீழ்க்காணும் சொற்களில் எவையேனும் இரண்டனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக : $2 \times 2 = 4$

i) கடிந்த ii) வீழ்வார்

iii) அளித்தல் iv) உணர்ந்தார்.

14. கீழ்க்காணும் சொற்களில் எவையேனும் **இரண்டனுக்கு** இலக்கணக் குறிப்பு தருக: $2 \times 2 = 4$

i) பழங்குடி ii) ஒருதனி

iii) மதிமுகம் iv) இரீஇ.

15. கீழ்க்காணும் சொற்களில் எவையேனும் **இரண்டனுக்குப்** புணர்ச்சி இலக்கணம் தருக: $2 \times 2 = 4$

i) கருங்கூந்தல் ii) காலங்கடந்தது

iii) நாடெலாம் iv) தென்மேற்கு.

16. கீழ்க்காணும் இரு வினைமுற்றுகளில் ஏதேனும் **ஒன்றனுக்குத்** தொழிற்பெயர் எழுதுக : $1 \times 2 = 2$

i) பாடினான் ii) வாடியது.

17. சொற்பொருள் பின்வருநிலையணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக. $1 \times 4 = 4$

*அல்லது*

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு

- இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.

18. பின்வரும் வினாவிற்கு விடை தருக : $1 \times 2 = 2$

ஆய்தக்குறுக்கமாவது யாது ? விளக்குக.

*அல்லது*

முற்றெச்சத்தை எடுத்துக்காட்டுத் தந்து விளக்கு.

19. பின்வரும் வினாவிற்கு விடை தருக : $1 \times 2 = 2$

குறிப்புமொழி என்றால் என்ன ?

*அல்லது*

விடை எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

VI. 20. கீழ்க்காணும் உரைநடையைப் படித்துத் தகுந்த நிறுத்தற் குறியிடுக : $1 \times 2 = 2$

தமிழ் இளைஞர்களே பெறற்கரிய இன்ப நாட்டில் பிறக்கும் பேறு பெற்றிருக்கிறீர்கள் தமிழ் இன்பத்திலும் சிறந்த இன்பம் இவ்வுலகிலுண்டோ

21. கீழ்க்காணும் சொற்களில் எவையேனும் **இரண்டனுக்குத்** திருந்திய சொற்களை எழுதுக : $2 \times 1 = 2$

i) உசிர் ii) கடகால்

iii) சீயக்காய் iv) சுவற்றில்.

i) நிகரற்ற ii) பெருங்குணம்

iii) பார்க்கெலாம் iv) இணையிலா.

23. கீழ்க்காணும் தொடர்களில் உள்ள எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக : $3 \times 2 = 6$

i) என்னெழுத்து இகழேல்.

ii) பரவைகள் பயிறு வகைகளைத் தின்னும்

iii) ஒளி கொடுத்தால் வளி கிடைக்கும்.

24. கீழ்க்காணும் வேற்று மொழிச் சொற்களுக்குத் தனித்தமிழ்ச் சொற்களை எழுதுக : $2 \times 1 = 2$

i) ஆஸ்தி ii) போஸ்ட் ஆபிஸ்.

25. கீழ்க்காணும் தொடரைச் செய்தி வாக்கியமாக மாற்றுக : $1 \times 2 = 2$

அனைவரும் தாய்மொழியைப் போற்றுக.

26. கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப் பிழைகளை நீக்கி எழுதுக : $1 \times 2 = 2$

அந்த பொன்தேங்காயை உடைத்து பார்த்தார்கள். அதனுள்ளே மாணிக்க பரல்கள் இருந்தன. அரசர் வரிசையறிந்துப் பரிசளிக்கும் திறத்தை யாவரும் அறிந்து வியந்து மகிழ்ந்து பாராட்டினர்.

27. கீழ்க்காணும் தொடரை வினாத் தொடராக மாற்றுக : $1 \times 2 = 2$

பாரதியை அனைவரும் அறிவர்.

VII. 28. கீழ்க்காணும் ஆங்கிலத் தொடர்களைத் தமிழில் மொழிமாற்றம் செய்க : $1 \times 4 = 4$

Those new to the principle of showing mercy and thus forgiving their enemies might find it very difficult to practise it initially. But once accustomed to this wonderful virtue, you will not only find more happiness but also you will find your enemies changing into your friends.

29. கீழ்க்காணும் மரபுத் தொடர்கள் அல்லது பழமொழிகளில் எவையேனும் **மூன்றனைத்** தமிழில் மொழிபெயர்க்க : $3 \times 2 = 6$

i) Look before you leap.

ii) Familiarity breeds contempt.

iii) The lawmaker should not be a law breaker.

iv) Health is wealth.

v) Time and tide wait for none.